DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -12

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. பானுமதி | Caste: |
| Husband'sName: | திரு. பாரிவள்ளல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A11, A13 to A18 present. A8 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 08.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன பிரபு என் மகன். இறந்துபோன சுரேஷ் ஓர்படியார் மகன். இறந்துபோன காசிநாதன் எனது கொழுந்தனார். இறந்துபோன தர்மலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் எனது கொழுந்தனார் மகன்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் கொலை செய்தவர்கள் என்று சாட்சி கூறுகிறார். ஆஜர் எதிரிகள் எனது கிராமத்தை சேர்ந்தவர்கள் தான்.

16.05.2008 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு மேலாக நான், மல்லிகா, ஜெயா ஆகியோர் வேலைக்கு போவதற்காக பாலுசாமி வீட்டிற்கு முன்னால் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது காசிநாதனின் மகன்கள் 3 பேரும் குளித்துவிட்டு வந்துகொண்டிருந்தார்கள். அப்போது என் மகன் பிரபுவும், சுரேசும் அவர்களுக்கு சற்று முன்பின் வந்துகொண்டிருந்தார்கள். எதிரிகள் திருஞானம்,

ரவி(பிரசிடண்ட்) , பிரபாகரன், பழனிசாமி ஆகியோர் கத்திகளுடன் ஓடிவந்தார்கள். எதிரிகள் திருஞானமும், ரவியும் சுரேசை துரத்திகொண்டு ஓடினார்கள். எதிரிகள் இருவரையும் சாட்சி சரியாக அடையாளம் காட்டுகிறார்.

எதிரிகள் பிரபாகரனும், பழனிசாமியும் என் மகன் பிரபுவை துரத்திசென்று வெட்டினார்கள். எதிரி பழனிசாமி என் மகனின் கழுத்திலும், காலிலும் வெட்டினார். (எதிரி பழனிசாமியை சரியாக அடையாளம் காட்டுகிறார்.) எதிரி பிரபாகரன் என் மகனின் மார்பில் கத்தியால் குத்தினார். நான் சென்று என் மகனை ஏன் கொல்லுகிறீர்கள் என்று கேட்டபோது எதிரி பழனிசாமி எனது இடுப்பில் உதைத்து என் இடுப்பை உடைத்துவிட்டார்.

என்னால் எழுந்து நிற்கமுடியவில்லை. எதிரி பழனிசாமி எனது மகனின் கழுத்தை வெட்டி, தலையை காலில் பந்தாடி ரோட்டில் உருட்டி சென்றார்கள். காசிநாதன் இளைய மகனை வெட்டிபோட்டிருந்தார்கள். நான் எழுந்து ரத்தத்தை பார்த்துக்கொண்டே நடந்து சென்றேன். காசிநாதனின் இளையமகன் இறந்துகிடந்த இடத்திற்கு சற்று தள்ளியுள்ள இடத்தில் காசிநாதன், அவரது மனைவி, மற்றும் அவரது மூத்த மகன் ஆகியோர்களை வெட்டிபோட்டிருந்தார்கள். காசிநாதன் மனைவி உயிருக்கு துடித்துக்கொண்டிருந்தார்.

காசிநாதனின் குடல் சரிந்துவிட்டது. காசிநாதனின் மூத்தமகன் உடல் தலையில்லாமல் முண்டமாக கிடந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் காலை 10.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் இல்லை. சற்று நேரம் பொறுத்துதான் வந்தார்கள். அவர்கள் வந்தபோது 11.00 மணி இருக்குமா என்றால் 10.00 மணிக்கு வந்திருப்பார்கள். சம்பவஇடத்திற்கு ஆம்புலன்ஸ் வாகனம் பிற்பகல் 3.00 மணிக்கு வந்திருக்குமா என்றால் இருக்கலாம். எத்தனை மணிக்கு என் மகன் பிரபுவின் உடலை ஆம்புலன்ஸ் வண்டியில் எடுத்து சென்றார்கள் என்றால் எனக்கு நேரம் தெரியவில்லை. சாட்சி பின்னிட்டு பிற்பகல் 3.00 மணி இருக்கலாம் என்று சொல்லுகிறார்.

அன்று காலையிலேயே 200, 300 போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் ராஜலிங்கம் புகார் கொடுத்துவிட்டார். எல்லோருக்கும் ஒன்றாகவே சேர்த்து கொடுத்துவிட்டார் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். எல்லோருக்கும் சேர்த்து தானே புகார் கொடுத்துவிட்டதாக ராஜலிங்கம் என்னிடம் எப்போது சொன்னார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் அழுதுகொண்டிருந்ததால் எனக்கு தெரியவில்லை.

புகார் கொடுப்பதற்கு நான் காவல்நிலையம் போகவில்லை. தேசிங்குபாலன் கொலை வழக்கில் என் மகன் பிரபு ஒரு எதிரி என்றால் சரிதான். என் மகன் தலையை எதிரி பழனிசாமி காலால் உதைத்துக்கொண்டே சென்று தேசிங்குபாலன் இறந்து இடத்தில் போட்டுவிட்டார் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். தேசிங்குபாலன் கொலை வழக்கில் எதிரிகள் அனைவரும் சாட்சிகள் என்றால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு வந்த போலிசார் எதிரிகள் யார்யாரை காவல்நிலையத்திற்கு பிடித்து சென்றார்கள் என்றால் நான் அழுதுகொண்டிருந்ததால் கவனிக்கவில்லை. வண்ணாங்குளத்திற்கும், பூராசாமி கடைக்கும் இடையே 50 அடி தொலைவு இருக்குமா என்றால் எனக்கு அடிகணக்கு தெரியவில்லை. வண்ணாங்குளத்திலிருந்து பூராசாமி கடைக்கு 2 நிமிடத்தில் நடந்து போய்விடமுடியுமா என்றால் இல்லை. நேரமாகும். சம்பவஇடத்திலிருந்து பூராசாமி கடைக்கு 1/2 மணி நேரத்தில் நடந்துபோய்விடலாம் என்றால் சரியல்ல. குறைந்த நேரத்திலேயே போய்விடலாம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

கல்லூரியில் படித்துகொண்டிருந்த ராஜலிங்கம் சம்பவம் குறித்து கேள்விபட்டு எத்தனை மணிக்கு ஊருக்கு வந்தார் என்றால் அவர் சம்பவத்தினத்தன்று வீட்டில்தான் இருந்தார். கல்லூரி விடுமுறை என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். நான் விவசாய கூலிவேலை செய்கிறேன். வழக்கமாக காலை 9.00 முதல் 10.00 மணிக்கு வேலைக்கு புறப்பட்டு செல்வோம். சம்பவத்தினத்திற்கு முந்தைய தினம் யாருடைய வயலுக்கு வேலைக்கு சென்றிருந்தேன் என்றால் அன்றைய தினம் நான் வேலைக்கு போகவில்லை.

எதிரிகள் ரவி, திருஞானம் ஆகியோர் என் மகனை வெட்டியதாகவும், அதனை நான் பார்த்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் மகனை வெட்டியதை நான் கண்ணால் பார்த்தேன் என்றும், நான் எப்படி பொய்யாக சொல்வேன் என்றும் சாட்சி சுயமாக சொல்லுகிறார். சம்பவத்தினத்தன்று நான் வழக்கம் போல் கூலி வேலைக்கு சென்றுவிட்டு மாலையில் தான் வீட்டிற்கு வந்தேன் என்றாலும், சம்பவம் எதனையும் நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

**6 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் காளியம்மன் கோவில் தெருவில் வசிக்கிறேன். நாங்கள் பாலுசாமி வீட்டின் முன்புறம் ரோட்டில் நின்று கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் திருஞானம், ரவி, பிரபாகரன், பழனிசாமி ஆகியோர் பாலுசாமி வீட்டு சந்தில் மறைந்திருந்து ஓடினார்கள். அப்போது என் மகன் உள்ளிட்டோர் வண்ணாங்குளத்தில் குளித்துவிட்டு வந்துகொண்டிருந்தார்கள். கிழக்கிலிருந்து மேற்கே வந்து தெற்கில் திரும்பினால் தான் கீழதெருவில் உள்ள பாலுசாமி வீட்டிற்கு வரமுடியும் என்றால் சரிதான்.

எதிரிகள் துரத்தியதில் என் மகனும், மற்றவர்களும் எந்த பக்கமாக ஓடினார்கள் என்றால் என் மகனை வெட்டியதை மட்டும் தான் நான் பார்த்தேன். மற்றவர்கள் எந்த பக்கம் ஓடினார்கள் என்று நான் பார்க்கவில்லை. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் அதனை எப்படி சொல்லமுடியும் என்று சாட்சி கேட்கிறார். சம்பவம் குறித்து எனக்கு தெரிந்த சங்கதிகள் அனைத்தையும் முதல்விசாரணையில் சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். என் மகனை எதிரிகள் வெட்டியபோது நான் சென்று தடுத்ததாகவும், அப்போது எதிரி பழனிசாமி என்னை இடுப்பில் எட்டி உதைத்ததாகவும், அதில் எனது இடுப்பு உடைந்துவிட்டதாகவும் போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் **சாட்சி அழுகஆரம்பித்துவிட்டார்**.

அந்த காயத்திற்காக நான் வைத்தியம் எதுவும் செய்துகொள்ளவில்லை. ( எதிரி பழனிசாமி என்பவர் எதிரிகள் கூண்டில் அமர்ந்துகொண்டு நீதிமன்றத்தை மதிக்காத

வகையில் கையை துாக்கி கொண்டும் மோசமான உடல்மொழியை வெளிப்படுத்துகிறார். அதற்காக நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டார்.) நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து தெற்கு நோக்கி வந்து மீண்டும் மேற்கே திரும்பினால் தான் காசிநாதன் உள்ளிட்டோர் வெட்டப்பட்டு கிடந்த மற்றொரு கீழ தெருவை அடைய முடியும் என்றால் சரிதான்.

காசிநாதன் குடும்பத்தினர் ஒரே இடத்தில் தான் வெட்டப்பட்டு கிடந்தார்கள் என்றால் காசிநாதனின் இளைய மகன் மட்டும் சற்று தள்ளி கிடந்தார். மற்ற மூவரும் ஒரே இடத்தில் தான் கிடந்தார்கள். சம்பவதினத்தன்று நான் ஊரிலேயே இல்லை என்றாலும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.